### அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை– 6
### இடைநிலைப் பள்ளி விடுப்புச் சான்றிதழ் பொதுத் தேர்வு, மார்ச் – 2017
### அறிவியல் விடைக் குறிப்புகள்

மொத்த மதிப்பெண்கள் : 75

## பிரிவு – I

| சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக. | | 15 X 1 = 15 |
|---|---|---|
| 1 | பீட்டா | 1 |
| 2 | BCG | 1 |
| 3 | தைமஸ் | 1 |
| 4 | மைக்ரோபைல் | 1 |
| 5 | இடது ஆரிக்கிள் மற்றும் இடது வென்ட்ரிக்கிள் | 1 |
| 6 | மைக்கோரைசாவேர்கள் / மைக்கோரைசால் வேர்கள் | 1 |
| 7 | முதல் நிலை சுத்திகரிப்பு | 1 |
| 8 | ஹீலியம் – ஆக்ஸிஜன் | 1 |
| 9 | லாக்டிக் அமிலம் | 1 |
| 10 | 14வது தொகுதியில் | 1 |
| 11 | எத்தனாயிக் அமிலம் | 1 |
| 12 | 0.01 mm | 1 |
| 13 | விசை | 1 |
| 14 | மின்னாற்றல் | 1 |
| 15 | காந்தப்புலம் | 1 |

## பிரிவு–II, மதிப்பெண்கள்– 40

| குறிப்பு ஏதேனும் 20 வினாக்களுக்கு விடையளிக்கவும் | 20 X 2 = 40 | | |
|---|---|---|---|
| 16 | i) சிற்றினங்களுக்கிடையே காணப்படும் மாறுபாடு<br>ii) பேரினங்களுக்கிடையே காணப்படும் மாறுபாடு | 1<br>1 | 2 |
| 17 | மரபுப் பொறியியல் என்பது உயிரியின் குரோமோசோமின் டி.என்.ஏ–வில் புதிதாக மரபியல் தன்மைகளைச் **சேர்த்தோ, குறைத்தோ மாற்றம்** செய்வதாகும். | | 2 |
| 18 | i) தடுப்பு மருந்து – நுண்ணுயிரி<br>ii) இயற்கை வாயு – எரிபொருள்.<br>iii) சிட்ரிக் அமிலம் – கரிமஅமிலங்கள்.<br>iv) வைட்டமின்கள் – வளர்சிதை மாற்றம். | 4 x ½ | 2 |
| 19 | **தவறு.**<br>மராசுமஸ் நோயினால் எடைக் குறைவு, கடுமையான வயிற்றுப்போக்கு மற்றும் எலும்பு மீது தோல் போர்த்தப்பட்டது போன்ற உடலமைப்பு காணப்படும். குவாஷியோர்கர் நோயினால் உப்பிய வயிறு, முகம் மற்றும் கால்களில் வீக்கம் காணப்படும். | 1<br>1 | 2 |
| 20 |  <br>குறிப்பு: படம் வரையவில்லை என்றாலும் பாகங்கள் எழுதி இருந்தால் (1/2+ 1/2 = 1 மதிப்பெண்) வழங்கலாம். | படம் = ½ +½<br>பாகங்கள் ½ + ½ | 2 |
| 21 |  | படம் = 1<br>பாகங்கள் ½ + ½ | 2 |



Scanned by CamScanner

| | | 4 x½ | 2 |
|---|---|---|---|

**22**

i) மிகவும் தடிமனான தோல்

ii) நீரை ஈர்த்து வைத்துக் கொள்ளும் ஆஸ்மாடிக் செல்கள்.

iii) அடர்த்தியான கண் புருவங்கள். — 1 — 2

iv) மணல் புகாத நாசித் துளைகள். — 1

**23** — 2

i) குளோமுருலஸ்

ii) சீல்

**24**

| கழிவு நீக்க உறுப்பு | வெளியேற்றும் கழிவு | கழிவுப்பொருட்கள் |
|---|---|---|
| சிறுநீரகம் | சிறுநீர் | யூரியா, யூரிக் அமிலம், கிரியாட்டினின் போன்ற முக்கிய நைட்ரஜன் கழிவுகள் |
| நுரையீரல் | வெளியேற்றப்படும் காற்று | <u>கார்பன்–டை–ஆக்சைடு / $CO_2$ / கரியமில வாயு, நீர் – ஆவியாதல்.</u> |
| தோல் | <u>வியர்வை</u> | அதிகமான நீர் மற்றும் உப்புகள் |

1

1

½ — 2

**25**

i) A–ஈர்ப்பு திசை சார்பு இயக்கம் அல்லது நேர் ஈர்ப்பு சார்பு இயக்கம். — ½

B–ஒளித் திசை சார்பு இயக்கம் அல்லது எதிர் ஈர்ப்பு சார்பு இயக்கம். — ½

ii) ஏதேனும் ஒரு வேறுபாடு — 1

| A மற்றும் B யின் இயக்கம் | தொட்டால் சிணுங்கி இலையின் இயக்கம் |
|---|---|
| 1. வளர்ச்சி சார் இயக்கம் | 1. வளர்ச்சி சாரா இயக்கம் |
| 2. தூண்டலுக்கு மெதுவானபதில் வினை | 2. தூண்டலின் உடனடி பதில் வினை |

1 — 2

**26**

i) நொதித்தல் (அ) காற்றில்லா சுவாசம் — 1

ii) ஈஸ்ட்

**27** — 2

பொருத்துக — 4 x½

| (அ) | | (ஆ) |
|---|---|---|
| a) அம்மோனியாடெலிக் | – | மீன்கள் |
| b) யூரியோடெலிக் | – | பாலூட்டிகள் |
| c) யூரிகோடெலிக் | – | பறவைகள் |
| d) நெப்ரீடியாக்கள் | – | வளைதசை புழுக்கள். |

**28** புல் → வெட்டுக்கிளி → தவளை → பாம்பு → கழுகு — 2

**29** எவையேனும் நான்கு மட்டும். — 4 x½ — 2

1. பயோ–ஆல்கஹால் (அல்லது) உயிரி எரிசாரயம்
2. பசுமை டீசல்
3. பயோ–டீசல் (அல்லது) உயிரி டீசல்
4. தாவர எண்ணெய்கள்
5. பயோ – ஈத்தர் (அல்லது) உயிரி ஈத்தர்
6. உயிரி–வாயு (அல்லது) பயோ–கேஸ்

**30** — 4 x½ — 2

| வளங்கள் | A | B | C |
|---|---|---|---|
| திரும்ப பெறும் வளங்கள் | <u>ஹைட்ரஜன்</u> | காற்று | <u>சூரிய ஒளி ஆற்றல்</u> |
| திரும்ப பெற இயலாத வளங்கள் | <u>கரி</u> | இயற்கை வாயு | <u>பெட்ரோலியம்</u> |



Scanned by CamScanner

| | | | |
|---|---|---|---|
| 31 | 1. நிலக்கரி<br>2. பெட்ரோலியம்<br>3. இயற்கை வாயு (ஏதேனும் இரண்டு) | 1<br>1 | 2 |
| 32 | <u>**பிரௌனியன் இயக்கம் :**</u> தொடர்ந்து ஒழுங்கில்லா நிலையில் இயங்கும் கூழ்மத் துகள்களின் இயக்கமே பிரௌனியன் இயக்கம் ஆகும். | | 2 |
| 33 | கரைசல் செறிவின் நிறை சதவீதம்<br>$= \frac{\text{கரைபொருளின் நிறை}}{\text{கரைபொருளின் நிறை + கரைப்பானின் நிறை}} \times 100$<br>$= \frac{20}{20+50} \times 100$<br>$= 28.57\%$ | 1<br>½<br>½ | 2 |
| 34 | மோல்களின் எண்ணிக்கை $= \frac{\text{அணுக்களின் எண்ணிக்கை}}{6.023 \times 10^{23}}$ (அல்லது)<br>$= \frac{\text{அணுக்களின் எண்ணிக்கை}}{\text{அவகாட்ரோ எண்}}$<br>$= \frac{12.046 \times 10^{22}}{6.023 \times 10^{23}}$<br>= 0.2 மோல் (முடிவு + அலகு) | 1<br>½<br>½ | 2 |
| 35 | i) வலிமை குறைந்த அமிலம் A<br>வலிமை மிகுந்த அமிலம் B<br>ii) வலிமை குறைந்த அமிலம் – $CH_3COOH$ (அசிட்டிக் அமிலம்) , HCOOH (பார்மிக் அமிலம்), சிட்ரிக் அமிலம், மாலிக் அமிலம், டார்டாரிக் அமிலம்<br>(ஏதேனும் ஒரு வலிமை குறைந்த அமிலம்)<br>**வலிமை மிகுந்த அமிலம்** – HCl (ஹைட்ரோ குளோரிக் அமிலம்) , $HNO_3$ (நைட்ரிக் அமிலம்), $H_2SO_4$ (கந்தக அமிலம்), $H_3PO_4$ (பாஸ்பாரிக் அமிலம்)<br>(ஏதேனும் ஒரு வலிமை மிகுந்த அமிலம்) | ½<br>½<br>½<br>½ | 2 |
| 36 | i) HCOOH<br>ii) வினிகர் | 1<br>1 | 2 |
| 37 | i) முதல் தொடர் மிகவும் குறுகிய தொடர் ஆகும். இதில் இரண்டு தனிமங்கள் மட்டும் உள்ளன. (அல்லது)<br>இரண்டாவது தொடர் குறுகிய தொடர் ஆகும். இதில் எட்டு தனிமங்கள் உள்ளன.<br>ii) 18 ஆம் தொகுதி தனிமங்கள் உயரிய வாயுக்கள் (அ) மந்தவாயுக்கள். (அல்லது)<br>17 ஆம் தொகுதி தனிமங்கள் ஹேலோஜன் குடும்பம் என்று அழைக்கப்படுகிறது. | 1<br>1 | 2 |
| 38 | அ) உறுதிப்படுத்துதல் மற்றும் காரணம் சரி. காரணம் சரியாக பொருந்துகிறது. | | 2 |
| 39 | வேதிப்பெயர் அல்லது வேதி வாய்ப்பாடு<br>i) A – $CH_3COOH$(எத்தனாயிக் அமிலம்) / அசிட்டிக் அமிலம்<br>B – $CH_3COOC_2H_5$(எத்தில்எத்தனோயேட்) / எத்தில் அசிட்டேட்<br>ii) எஸ்டராக்குதல்<br>$C_2H_5OH + CH_3COOH \xrightarrow{\text{அடர் } H_2SO_4} CH_3COOC_2H_5 + H_2O$ | ½<br>½<br>½<br>½ | 2 |
| 40 | ஈ) (A) சரியானது (R), (A) – ஐ வலியுறுத்துகிறது. | | 2 |



SC (t)—1a

Scanned by CamScanner

**41**

m = 1கி.கி, h = 20மீ ½

பொருள் தரையை வந்தடையும் போது திசைவேகம்

$V_1 = \sqrt{2gh}$ ½

$= \sqrt{2X10x20} = \sqrt{400} =$ 20 மீ.வி$^{-1}$ 2

மீண்டெழும் திசைவேகம்

$V_2$ = -20 மீ.வி$^{-1}$ ½

உந்தமாற்றம் = இறுதி உந்தம் – தொடக்க உந்தம் (அல்லது)

$= mv_2 - mv_1$

= [1X(-20)] – [1X20] ½

= -20-20 = -40 கி.கி.மி.வி$^{-1}$

உந்த மாறுபாட்டின் எண் மதிப்பு 40 கி.கி.மி.வி$^{-1}$ 2

**42** 4 x½

| | உறுப்புகள் | | குறியீடு |
|---|---|---|---|
| (a) | மின்கலம் | i) |  |
| (b) | சாவி (அ) சுவிட்சு (மூடியது) | ii) |  |
| (c) | கம்பி இணைப்பு | iii) |  |
| (d) | மின்தடை | iv) |  |

2

**43**

i. அம்மீட்டர் 1

ii. மரபுசாரா ஆற்றல் 1 2

**44** 2 x 1 2

ஏதேனும் இரண்டு மட்டும்

1. கடல் அல்லது பெருங்கடலின் ஆழ்பகுதிக்கும், மேற்பரப்பிற்கும் இடையே உள்ள வெப்பநிலை வேறுபாடு பெருங்கடல் வெப்ப ஆற்றல் எனப்படும்.
2. 2கி.மீ ஆழத்தில் உள்ள நீருக்கும் மேற்பரப்பில் உள்ள நீருக்கும் இடையிலான வெப்பநிலை வேறுபாடு 293K (20°C) அல்லது அதிகமாக இருந்தால் இத்தகைய திட்டத்தை செயல்படுத்தலாம்.
3. வெப்பமான நீர் ஆவியாகும் திரவத்தை கொதிக்க வைக்கவும், குளிர்விக்கவும் பயன்படுகிறது.
4. திரவத்தின் ஆவி மின்னியற்றியின் விசையாழியை இயக்கப் பயன்படுகிறது.

**45** 2

அ) 1




ஆ) குழியாடியின் குவியத்தின் வழியே செல்லும் ஒளிக்கதிர் எதிரொளிப்புக்குப் பின் முதன்மை (முக்கிய) அச்சுக்கு இணையாகச் செல்லும். 1

**46** 2

ஃபிளமிங் வலக்கை விதி

வலக்கையின் சுட்டு விரல், நடுவிரல், பெருவிரல் மூன்றையும் ஒன்றுக்கொன்று நேர்குத்தாக வைக்கவும். சுட்டு விரல் காந்தபுலத்தின் திசையையும், பெருவிரல் கடத்தி இயங்கும் திசையையும் குறித்தால், நடுவிரல் தூண்டு மின்னோட்டத்தின் திசையைக் குறிக்கும்.

**47**

u= -25செ.மீ v=20 செ.மீ

லென்சு சமன்பாடு

$\frac{1}{f} = \frac{1}{v} - \frac{1}{u}$ 1

$= \frac{1}{20} - \frac{1}{-25}$ ½ 2

f = 11.11 செ.மீ

லென்சின் குவியத்தொலைவு = 11.11 செ.மீ

(முடிவு + அலகு) ½



Scanned by CamScanner

| குறிப்பு : ஒவ்வொரு பகுதியில் இருந்தும் ஒரு வினா வீதம் 4 வினாக்களுக்கு விடையளிக்கவும். | பிரிவு–III | மதிப்பெண்கள்= 20<br>4 X 5 = 20 | |
|---|---|---|---|
| | **பகுதி–I** | | |
| 48 | அ) மலேரியாவை கட்டுப்படுத்தும் முறைகள் (ஏதேனும் மூன்று)<br>1. சுகாதார முறைகளான கிருமி நாசினி தெளித்தல், புகைபோடுதல்.<br>2. சாக்கடையில் நீர் தேங்காமல் சுத்தம் செய்தல்.<br>3. கொசு வளர்ச்சியைத் தடுக்க நீர் தேங்கி இருக்கும் இடங்களை மூடச்செய்தல்<br>4. கொசுவலை, கொசுவிரட்டிகளை பயன்படுத்துதல்.<br>ஆ) அறிகுறிகள் (ஏதேனும் இரண்டு அறிகுறிகள்)<br>குளிர், நடுக்கம், கடுங்காய்ச்சல், மண்ணீரல் பழுதடைதலும் மற்றும் கல்லீரல் திசு அழிதல். | 3<br><br><br><br><br><br>2 | 5 |
| 49 | அ) 1. மூளை உறைகள்<br>2. முள்ளெலும்பு தொடர்<br>3. டியூராமேட்டர்<br>4. அரக்னாய்டு உறை<br>5. பையாமேட்டர்<br>ஆ) 1. மையலின் உறை (அ) மெடுல்லேட்டட் (அ) வெண்மை நிற நியூரான்கள்<br>2. மையலின் உறையற்ற (அ) மெடுல்லேட்டட் அற்றவை (அ) சாம்பல் நிற நியூரான்கள்.<br>3. ஒரு முனை நியூரான்கள்.<br>4. இரு முனை நியூரான்கள்.<br>5. பல முனை நியூரான்கள். | 5x½<br>=2½<br><br><br><br>5x½<br>=2 ½ | 5 |
| | **பகுதி–II** | | |
| 50 | இரு வித்திலைத் தாவரவிதை – அவரை<br><br><br>இரு வித்திலைத் தாவர விதை (ஏதேனும் ஆறு குறிப்புகள்)<br>1. அவரை விதையானது தடித்த, சிறுநீரக வடிவம் கொண்டு மெலிதாக ஒரு புறம் வளைந்து காணப்படும்.<br>2. இந்தபகுதியில் நீள் வட்டத்தில் அமைந்த வெண்மையான, சற்று தடித்த **ரஃபே** என்ற அமைப்பு உள்ளது.<br>3. ரஃபேயின் நுனியில் ஒரு சிறிய துளை உள்ளது. இதற்கு **வளர்துளை** அல்லது **மைக்ரோபைல்** எனப்படும்.<br>4. கரு விதையுறையால் சூழப்பட்டுள்ளது.<br>5. சதைப்பற்றுள்ள இரு விதையிலைகள் கருவின் ஒரு மைய அச்சில் இணைந்துள்ளன.<br>6. மைய அச்சின் ஒரு முனையில் **முளை வேரும்** மற்றொரு முனையில் **முளைக் குருத்தும்** உள்ளன.<br>7. முளை வேரின் நுனி வளர் துளையின் அருகில் உள்ளது.<br>8. முளைக்குருத்து **இரண்டு வித்திலைகளுக்கு** இடையில் உள்ளது.<br>9. முளைக்குருத்தின் சிறிய குட்டையான மையத் தண்டும், மிகச்சிறிய மொட்டும் குவிந்த இரண்டு சிறிய இலைகளும் உள்ளன. | படம் –1<br>பாகங்கள் - 1<br><br><br><br>6 X ½<br>=3 | 5 |



Scanned by CamScanner

| | | | |
|---|---|---|---|
| | | | 5 |
| 51 | அ) பசுமை வேதியியல்<br>பசுமை வேதியியல் என்பது தீமை விளைவிக்கக் கூடிய வேதிப்பொருள்களை குறைந்த அளவே உருவாக்குதல் அல்லது அப்பொருட்களை பயன்பாட்டிலிருந்து அறவே நீக்கும் ஒருவித புதிய வழிமுறையாகும்.<br>ஆ) **பசுமை வேதியியலின் விளைவால் உருவாக்கப்படக் கூடிய எதிர்காலப் பொருட்கள்.**<br>1. கால்நடை தீவனத்திற்கான மூலப்பொருட்கள் குறைவதற்கு பதிலாக புதுப்பிக்கத் தக்க புதிய பொருட்கள்.<br>2. தனிம அளவை வேதிக்காரணிகளுக்குப் பதிலாக வினையூக்கி வேதிக்காரணிகளை உருவாக்குதல்.<br>3. பசுமை வேதியியல், வாழ்க்கை சுழற்சியில் எல்லாவகைகளிலும் புதிய பொருட்களை உருவாக்கப் பயன்படும். பசுமை வேதியியல் தீங்கினைக் குறைத்து மாசு ஏற்படுதலை தடுக்கக் கூடிய பொருட்களை உருவாக்குதல். | 2<br><br><br>3 | |
| | பகுதி – III | 5 x 1 | 5 |
| 52 | நவீன அணுக் கொள்கையின் கோட்பாடுகள் (ஏதேனும் ஐந்து குறிப்புகள்)<br>1. அணு வேதிவினையில் ஈடுபடும் மிகச் சிறிய துகள்கள் ஆகும்.<br>2. அணுக்கள் பிளக்க கூடியவை<br>3. ஒரு தனிமத்தின் அனைத்து அணுக்களும் அனைத்து பண்புகளிலும் ஒத்திருக்க வேண்டிய தேவை இல்லை.<br>ஐசோடோப்புகள் (அல்லது) ${}_{17}Cl^{35}, {}_{17}Cl^{37}$<br>4. வெவ்வேரு தனிமங்களைச் சேர்ந்த அணுக்கள் சில பண்புகளில் ஒத்திருக்கும்.<br>எ.கா. ஐசோபார்கள் (அல்லது) $({}_{18}Ar^{40}, {}_{20}Ca^{40})$<br>5. மூலக்கூறில் உள்ள அணுக்களின் விகிதம் முழுமையானதும் நிர்ணயிக்கப்பட்டதும் ஆகும். ஆனால் அஃது எளிய விகிதமாக இருக்க வேண்டிய அவசியமில்லை.<br>6. ஒரு தனிமத்தின் அணுக்களை மற்றொரு தனிமத்தின் அணுக்களாக மாற்று தனிமமாக்கல் முறையில் மாற்ற முடியும்.<br>7. ஒரு தனிமத்தின் நிறையை அதன் ஆற்றலாக மாற்ற முடியும். $E = mc^2$ | | |
| 53 | கழிவுப் பாகிலிருந்து எத்தனால் தயாரித்தல்<br>**i) நீர்த்தல்**<br>கழிவுப்பாகில் உள்ள சர்க்கரையின் செறிவு 8ல் இருந்து 10 சதவீதமாக குறையும் வரை நீர்க்கப்படுகிறது.<br>**ii) அம்மோனியம் உப்புக்கள் சேர்த்தல்**<br>நொதித்தலின் போது ஈஸ்ட்டிற்கு தேவையான நைட்ரஜன் அளவு குறைவதை தடுக்க அம்மோனியம் சல்பேட் அல்லது அம்மோனியம் பாஸ்பேட் சேர்த்து உரமூட்டப்படுகிறது.<br>**iii) ஈஸ்ட் சேர்த்தல்**<br>பெரிய நொதித்தல் தொட்டியில் ஈஸ்ட் சேர்த்து 303 k வெப்ப நிலையில் சில நாட்கள் வைக்கப்படுகிறது. அப்பொழுது ஈஸ்ட்டில் உள்ள இன்வர்டேஸ் மற்றும் சைமேஸ் நொதிகள் சர்க்கரையை எத்தனாலாக மாற்றுகிறது.<br>$C_{12}H_{22}O_{11} + H_2O \xrightarrow[\text{சைமேஸ்}]{\text{இன்வர்டேஸ்}} C_6H_{12}O_6 + C_6H_{12}O_6$<br>$C_6H_{12}O_6 \longrightarrow 2C_2H_5OH + 2CO_2$<br>நொதித்த நீர்மம் கழிவு நீர்மம் எனப்படும். | 1<br><br>1<br><br>1<br><br>1 | 5 |



Scanned by CamScanner

| | | | |
|---|---|---|---|
| | **iv) கழிவு நீர்மத்தை காய்ச்சி வடித்தல்**<br>1) 15 முதல் 18 சதவீதம் ஆல்கஹாலும் மீதிப் பகுதி நீராகவும் உள்ள நொதித்த நீர்மம் பின்ன காய்ச்சி வடித்தலுக்கு உட்படுத்தப்படுகிறது.<br>2) பின்னப் பகுதியானது 95.5 சதவீதம் எத்தனாலையும் 4.5 சதவீதம் நீரையும் கொண்டுள்ளது. இது எரிசாராயம் எனப்படும்.<br>3) இக்கலவையை 5– நந்தில் இருந்து 6 மணிநேரம் சுண்ணாம்புக்கல்லின் மீது காய்ச்சி வடிக்கப்பட்டு 12 மணிநேரம் வைத்து மீண்டும் காய்ச்சி வடித்து 100 சதவீதம் தூய ஆல்கஹால் பெறப்படுகிறது. | 1 | |

| | | | |
|---|---|---|---|
| | **பகுதி – IV** | | |
| 54 | அ) சமமற்ற புறவிசையொன்று செயல்பட்டு மாற்றும் வரை எந்த ஒரு பொருளும் தனது ஓய்வு நிலையையோ அல்லது ஒரே நேர்கோட்டில் அமைந்த சீரான இயக்க நிலையையோ மாற்றிக் கொள்ளாமல், தொடர்ந்து அதே நிலையில் இருக்கும்.<br>**எ.கா.**<br>1. ஓட்டுனர் மகிழுந்தை நிறுத்த தடையை செலுத்தும் வரை நாம் நம் இருக்கையோடு இயக்க நிலையில் இருக்கிறோம். தடையைச் செலுத்தும் போது முன்னோக்கி விழுதல்.<br>2. திடீரென இயங்கத் தொடங்கும் பேருந்தில் நின்று கொண்டிருப்பவர் பின்னோக்கி விழுதல்.<br>3. மகிழுந்து குறுகிய வளைவில் விரைந்து திரும்பும் பொழுது நாம் ஒரு பக்கமாக சாய்கிறோம்.<br>4. கேரம் பலகையில் செங்குத்தாக அடுக்கி வைக்கப்பட்ட கேரம் காய்களை கிடைமட்டமாக பலமாக அடிக்கும் போது அடிக்காய் விரைந்து நகர்கிறது. மற்ற காய்கள் நிலைமம் காரணமாக செங்குத்தாக அதே அடுக்கப்பட்ட நிலை மாறாமல் கேரம் பலகையில் அமர்கிறது. **(இதே மாதிரியான ஏதேனும் ஒரு விளக்கம்)** | 1<br><br><br><br>1 | 5 |
| | **ஆ) தீர்வு :**<br>$m_1 = 10kg$ $u_1 = 10\ ms^{-1}$ $v_1 = 4\ ms^{-1}$<br>$m_2 = 15kg$ $u_2 = 5\ ms^{-1}$ $v_2 = 9\ ms^{-1}$ $t = 2s$<br>**விசை (வினை)**<br>$F_1 = \frac{m_2(v_2 - u_2)}{t} = \frac{15(9-5)}{2} = 30\ N$<br>**விசை (எதிர்வினை)**<br>$F_2 = \frac{m_1(v_1 - u_1)}{t} = \frac{10(4-10)}{2} = -30\ N$<br>**வினை = - எதிர் வினை (அல்லது)** $\therefore F_1 = -F_2$ | | 1<br><br>1<br><br>1 |



Scanned by CamScanner

| | | | |
|---|---|---|---|
| 55 | கண்ணில் ஏற்படும் குறைபாடுகள்<br>i) கிட்டப்பார்வை (அல்லது) மையோபியா<br>ii) தூரப்பார்வை (அல்லது) ஹைபர் மெட்ரோபியா<br>iii) விழி ஏற்பமைவு திறன் குறைபாடு | 2 | 5 |
| | **அ) கிட்டப்பார்வை (மையோபியா)**<br>அருகில் உள்ள பொருள்களை தெளிவாகக் காண இயலும். தூரத்தில் உள்ள பொருட்களை தெளிவாக காண இயலாது. தொலை பொருளின் பிம்பம் விழித்திரைக்கு முன்பாகவே குவிக்கப்படுகிறது. | ½ | |
| | **காரணம்**<br>i) விழிலென்சின் அதிகப்படியான வளைவு<br>ii) விழிக் கோளம் நீள்வது. | | |
| | **சரிசெய்யும் முறை**<br>தகுந்த திறன் உடைய குழி லென்ஸ் பயன்படுத்தலாம். | ½ | |
| | **ஆ) தூரப்பார்வை (ஹைபர் மெட்ரோபியா)**<br>தொலைவில் உள்ள பொருள்களைத் தெளிவாக காண இயலும். அண்மையில் உள்ள பொருள்களைத் தெளிவாக காண இயலாது.<br>அண்மையில் உள்ள பொருளின் பிம்பம் விழித்திரைக்கு பின்பாகக் குவிக்கப்படுகிறது. | ½ | |
| | **காரணம்**<br>i) விழிலென்சின் குவியத் தொலைவு நீண்டிருத்தல்.<br>ii) விழிக் கோளம் சிறியதாவது. | | |
| | **சரிசெய்யும் முறை**<br>தகுந்த திறன் உடைய குவிலென்சை பயன்படுத்துதல் | ½ | |
| | **இ) விழி ஏற்பமைவு திறன் குறைபாடு (பிரஸ்பையோபியா)**<br>வயதாகும் போது அண்மை புள்ளி படிப்படியாக விலகிச் செல்லும். அவர்கள் அருகில் உள்ள பொருட்களை தெளிவாகவும் வசதியாகவும் பார்க்க இயலாது. | ½ | |
| | **காரணம்**<br>படிப்படியாக விழிலென்சின் வளையும் தன்மை குறைவது மற்றும் சிலியரித் தசைகள் பலவீனம் அடைவது. | | |
| | **சரிசெய்யும் முறை**<br>இரு குவிய கண்ணாடிகளைப் பயன்படுத்தலாம். | ½ | |

*******